# பனித்துளி செய்திகள்!

**"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)**

**துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!**

(திங்கள்தோறும்)

**06.07.2026** **துளிகள் – 27**

## "தேவ சித்தத்தின் ஊற்றே" நிரந்தர மகிழ்ச்சி!

ஒரு பெண் தன்னுடைய சம்மதத்தை திருமணமாகப்போகும் மனுஷனுக்கு கொடுப்பதற்கு முன்பாக "அவர் என்னை சந்தோஷப் படுத்துகிறவராயிருப்பாரா?" என்றுதான் கேட்கிறாள்! அதற்குப் பதிலாய், "நான் அவருக்கு மகிழ்ச்சியை கொடுக்கிறவளாய் இருந்திட முடியுமா?" என்ற சுயநலமில்லாத கேள்வியை இவள் கேட்பாளா என்பது இக்காலத்தில் சந்தேகத்திற்குரியதாகவே இருக்கிறது. இன்று, மனநோய் வைத்தியத்திற்குச் செல்லும் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கிறது. எதற்காக? "எப்படியாவது தங்களுக்கு சந்தோஷம் வேண்டும்!" என்ற இவர்களது பித்துப்பிடித்த தேடுதலே காரணமாகும்.

தேவனுடைய சித்தம் இன்னதென்று அறியவும், பின்பு அதை நிறைவேற்றவும் எடுக்கின்ற முயற்சியே சாலச் சிறந்ததாகும்! எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்? என்ற விஷயத்தை கிறிஸ்துவினுடைய தீர்மானத்திற்கு விட்டு விடுவதே ஒப்பற்ற வாழ்க்கையாகும்!

**– ரத்னம்**